செ.வெ.எண்: 9 நாள்: 03.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ரூ.38.30 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.08.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், சித்தன்னவாசல் ஊராட்சி, சித்தன்னவாசல் சுற்றுலாத்தள முகப்பு வாயிலில் கூட்டுறவு நிதியின் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட தடுப்புச்சுவர் கட்டுமானப் பணியையும், வீரப்பட்டி ஊராட்சி, வீரப்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மண்புழு உரம் தயாரிப்பு கொட்டகை பணியையும், இருந்திராப்பட்டி ஊராட்சி, மாரப்பட்டியில் ரூ.21.80 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நாற்றங்கால் பணியையும் என மொத்தம் ரூ.38.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.



இந்த ஆய்வின் போது கால்வாய்களில் உள்ள தேவையற்ற செடிகளை சுத்தப்படுத்தி மழைநீர் தடையின்றி வெளியே செல்லும் வகையில் சீரமைக்கவும், நாற்றங்கால்களில் மரக்கன்றுகளை உரிய முறையில் நடவு செய்து பராமரித்து வளர்ப்பதுடன் இந்த மரக்கன்றுகளை ஊராட்சிகளில் சிறந்த முறையில் நட்டு வளர்க்கவும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு

விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.து.பாஸ்கர், உதவி பொறியாளர் திரு.பாலமுருகன், ஊராட்சி மன்றத்தலைவர் திரு.ராமசாமி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**